பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 23 புதன்கிழமை (08.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :.252

# யாழ். வந்த ஐ.நா. உயர் அதிகாரியிடம் அட்டூழியங்களை நிறுத்தக் கோரிக்கை

## பிரதம நீதியரசரின் உத்தரவுகளை அமுலாக்கினால் சாத்தியமென யாழ். நீதிவான் எடுத்துரைப்பு





யாழ்ப்பாணம்,ஒகஸ்ட் 8

குடாநாட்டில் இடம்பெறும் கொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் ஆகிய அன்றாட அட்டூழியங்களைக் கட்டுப் படுத்த உதவுமாறு -

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரியான ஜோன் ஹோம்சிடம் வேண்டுகோள் விடுக் கப்பட்டது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஓக. 8

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் 35 வயது மதிக்கத்தக்க ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப் பட்டுள்ளார்.

கொலையுண்டவரின் சடலத்துக்கு அருகில் ஒரு அட்டை ஒன்றில் 'வன்னியன் படை' என்று எழுதப்பட்டிருந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வவுனியா பொலிஸாருடன், போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரும் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர்.

## தொண்டுப் பணியாளர் திருமலையில் கடத்தப்பட்டார்

திருகோணமலை நகரில் அருணகிரி வீதியில் இயங்கும் நிவாரண சேவைகளுக்கான அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் முஸ்லிம் பணிப்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதோரால் கடத் தப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மொஹமட் ஷவார் ஹன்ஸீர் (வயது 27) என்னும், நிவாரணப் பணிகளை மேற் கொண்டுவரும் 'யுனைட்டட் மெதடிஸ் குழு' என்ற அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றுபவரே கடத்தப்பட்டுள்ளார்.

## தமிழ் மக்களின் அவலங்கள் குறித்து 12 நாடுகளுக்கு கூட்டமைப்பினர் விளக்கம்

### தூதுக்குழு நேற்று நாடு திரும்பியது

கொழும்பு, ஓக.8

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் மற்றும் கொடுமைகள் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாடுகளின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வரும் விஜயம் ஒன்றை மேற்கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு நேற்று கொழும்பு திரும்பியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான இக் குழுவில் மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

நோர்வேயில் ஆரம்பித்த இவர்களின் பேச்சுக்கள் பிரிட்டன் வரை, வெளிவிவகார அமைச்சு மட்டங்களில் ராஜ தந்திரிகளுடன் இடம்பெற்றதாக குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

கொலைகள், கடத்தல்கள், கப்பம் கோரல் போன்ற மனித உரிமை மீறும் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல் மற்றும் இடப்பெயர்வு போன்றவற்றால் மக்கள் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களின் சுதந்திரமான நடமாட்டம், போக்குவரத்துக்கள், தாராள உணவுப் பொருள்கள் விநியோகம் என்பன அரசால்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழ் அகதியின் வழக்கில் பிரிட்டிஷ் நீதிமன்றம் நேற்று திருப்புமுனையான முக்கிய தீர்ப்பு

- லண்டனில் இருந்து குமரன் -

லண்டன், ஓக்.8

பிரிட்டனில் அகதிஅந்தஸ்துக் கோரி விண்ணப்பம்செய்த ஈழத்தமிழர் ஒருவரின் வழக்கில் திருப்புமுனையான, முக்கியமான தீர்ப்பை பிரிட்டனின் அகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கி யுள்ளது.

வழக்குத்தாக்கல் செய்த அகதி, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவர் அந்நாட்டு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவார் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புமூலம், பிரிட்டனின் உள்துறைத் திணைக்களத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான அணுகுமுறையிலும் -

நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ள அவர்களுடைய மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பான சட்ட நிவாரணங்களிலும்- பெரும் மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே 05 ஆம் பக்கத்தில்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் II

## விளம்பரப் பலகைகள் நேற்று அகற்றப்பட்டன

குடத்தனை,ஓக.8

பருத்தித்துறையில் ஓராங்கட்டையில் இருந்து பஸ்நிலையம்வரையானபிரதான வீதியில் வர்த்தக நிறுவனங்களில் பொருத் தப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள் நேற்று அகற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் அந்தப்புகுதியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தரம் 1 அனுமதிக்கு உயர்நீதிமன்ற வழிகாட்டலை பின்பற்றினால் இலவசக் கல்விமுறை சிதையும்

### விசனம் தெரிவிக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

கொழும்பு, ஓக.8

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இலவச கல்வி முறைக்கு ஆப்பு வைக்கும் விடயங்களிலேயே அமையும். இந்த வழிகாட்டலின் கீழ் கனவான்களின் பிள்ளைகள் மட்டுமே உத்தியான கல்வியைப் பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும். எனவே அரசு இவ் விடயத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும். - என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஆசியாக் கண்டத்தில் எழுத வாசிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையில் முன் நிற்பது இலங்கை. அமரர் கன்னங்கரவினால் முன்வைக்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப் பட்ட இலவசக் கல்வித்திட்டம்தான் இப் பெருமைக்கு அடித்தளம் இட்டது.

ஆனால் இப்பொழுது உயர்நீதிமன்றம் விடுத்துள்ள வழிகாட்டல்களும் ஆலோ

(08 ஆம் பக்கம் பார்க்க)

# எம்.பிக்களை லஞ்சம் கொடுத்து வாங்கி ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி!

### பின்னணியில் புலி ஆதரவாளராம்



கொழும்பு,ஓக. 8

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் தரப்புக்கு மாறி அமைச்சர்களான ஐ.தே.க. - ஜனநாயக அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல கோடி ரூபாவை லஞ்சமாகக் கொடுத்து, அவர்களை விலைக்கு வாங்கி, மீண்டும் அணி மாறவைத்து, அதன்மூலம் இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் சதி - சூழ்ச்சி - திட்டமிட்டுச் செயற்படுத்தப்படுகின்றது.

- இப்படி நாடாளுமன்றில் நேற்று அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டார் மேற்படி ஐ.தே.க. - ஜனநாயக அணியின் தலைவரும் பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சருமான கரு ஜயசூரிய.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் எமது ஆசானுமாகிய

வைத்தியகலாநிதி

**A.V. இராசரத்தினம்**

**(A.V.R.)**

29.07.2007 அன்று இயற்கை எய்தியமையையிட்டு எனது குடும்பத்தினரின் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாருக்கு கண்ணீர் காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

வைத்தியர் **கோவிந்தபிள்ளை சிவப்பிரகாசம்** D.A.M.
(மாணவன் - 1950)
**கோவிந்தபிள்ளை ஆயுர்வேத வைத்தியசாலை**
34, அராலி வீதி, சங்கானை.

(சி-53178)

## கண்ணீர் அஞ்சலி



**சந்தாம்பிள்ளை சகாயசீலன்**

*(முதுநிலை விரிவுரையாளர் - அரசறிவியல் துறை கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

05.08.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு ஆசான் சந்தாம்பிள்ளை சகாயசீலன் அவர்களின் இழப்பால் நாம் துடி துடிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

**முதலாம் வருட கலைப்பீட**
**அரசறிவியல்துறை**
**மாணவர்கள்**

*யாழ்.பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

(63395)


**மீண்டும் யாழ்.நகரில் Bata**



*எம்மிடம் மாணவர், உத்தியோகத்தர், வாலிபர், இளம் பெண்கள், சிறு பிள்ளைகளுக்கான அழகாக வடிவமைக்கப்பட்ட*

சப்பாத்துக்கள், பிளற்போம் பாதணிகள், ஹீல்ஸ், லெதர் பாதணிகள், நவீன ரபர் பாட்டாக்கள், 'ஆரோக்கிய' ரபர் பாட்டாக்கள்

என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**

*(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)*

இல. 25, 4ஆம் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)**

(C/53180)



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 09.08.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற் கொள்ளவும்.

- ★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டைக் கிளை
- ★ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- ★ P. ரவி, தாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

T.P.No. 222 2867, 222 3529 (63413)


### வடலியடைப்புக் கொலை: நால்வர் நேற்றுச் சரண்

வடலியடைப்பில் பொல்லடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் மரணமானசம்பவம் தொடர்பாக நால்வர் மல்லாகம் நீதிமன்றத் தில் நேற்று சரண் அடைந் தனர்.

சட்டத்தரணி மூலம் சரண் அடைந்த அவர்களை எதிர் வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## மகோற்சவகால கடை ஏலம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரால் எதிர்வரும் மகோற்சவத்தை முன்னிட்டு (10.08.2007) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்க முன்றலில் கடைகள் ஏலம் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**ம.விக்னேஸ்வரன்**
(செயலாளர்)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
பழைய மாணவர் சங்கத் தலைவர்
எம்.கே.சிவாஜிலிங்கம் (எம்.பி)
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி இந்திராதேவி கனகலிங்கம்**



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
யா/சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(63421)

### கந்தரோடை இளைஞர்கள் இருவரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக.8

சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த இருவர் காணாமற்போயுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தரோடையைச் சேர்ந்த சிறீதரன் தர்ஷகன் (வயது 21), என்பவர் அவரது வீட்டில் வைத்து கடத்தப்பட்டு பின்னர் காணா மற்போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தரோடை மடத்தடியைச் சேர்ந்த மகராஜன் ரவீந்திரன் (வயது 22) என்பவர் படை முகாமுக்கு கையொப்பம் இடுவதற்கெனச் சென்ற பின் காணாமற் போயுள்ளார் என ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1-5)

### மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவீழ்ந்து மரணம்

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் தவறி வீழ்ந்து மரணமானார். சுன்னாகம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இச் சம்பவம் இடம் பெற்றது.

சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தையா பரநிருபசிங்கம் (வயது 58) என்பவரே மரணமானவராவார்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சந்தாம்பிள்ளை சகாயசீலன்**



*(சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)*

கடந்த 05.08.2007 அன்று எமது அன்புக்குரிய விரிவுரையாளர் இறைபதம் எய்திவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசறிவியல் மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்

(63420)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மு.நவரத்தினம்**

*(இளைப்பாறிய நில அளவை உதவி அத்தியட்சகர்)*

*வடபகுதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும், முன்னாள் தலைவருமாகிய மு.நவரத்தினம் அவர்களின் மரணச் செய்திகேட்டு பெரும் அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம். துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது சங்க உறுப்பினரும், குடும்பத்தவரும் ஆழ்ந்த அனுதபாங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்,**
**வடபகுதி.**

*(63427)*

## மரண அறிவித்தல்

*நாகலிங்கம் பொன்னுத்துரை*



வேலணை, மணியகாரன் வீட்டடியை பிறப்பிடமாகவும் வேலணை, முதலாம் வட்டாரம், தாழ்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பொன்னுத்துரை (06.08.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் சிறிகரநாதன் (சிறி-கொழும்பு), ஜெகநாதன் (டென்மார்க்), சதானந்தன் (சுவிஸ்), சிவநாதன் (சிவா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், சோமசுந்தரம், பாக்கியலெட்சுமி, பூங்காவனம், முத்தம்மா, கண்மணி, இராசமணி (பிரான்ஸ்), சோதிமணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,*
*வேலணை.*

(63428)

தகவல்
சிவா (மகன்)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 15.09.2007

Senior Lecturer Grade I / Senior Lecturer Graded II / Lecturer (Probationary) in Dance (Bharathanatiyam)

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Music (Vocal / Miruthangam / Violin / Veena)

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Art & Design (Painting & Sculpture / Multimedia Design / Computer Graphics)

Those who have applied when it was advertised in July 2006 need not apply again

Instructor Grade II in Music (Vocal / Miruthangam / Violin / Veena)
Instructor Grade II in Dance (Bharathanatiyam)
Instructor Grade II in Art & Design (Painting & Sculpture)

| Post | Salary Code | Salary |
|---|---|---|
| Senior Lecturer Grade I | U-AC 3 (I) | Rs.42650-7x800 - 48250pm |
| Senior Lecturer Grade II | U-AC 3 (II) | Rs.37650-11x700 - 45350pm |
| Lecturer (Probationary) | U-AC 3 (IV) | Rs.26900-10x585 - 32750pm |
| Instructor Grade II | U-AS 1 (II) | Rs.22595-10x280 - 25395pm |

Note: In addition to the above salary the allowances approved by the University Grants Commission will also be paid.

**Statutory benefits**

i. Sabbatical leave entitlement for the post of Senior Lecturer Grade II and above
ii Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
iii Gratuity payments
iv Employees' Trust Fund benefits
V Free medical Services

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope** 23 x 10 c.m.in size.

Those who wish to apply for **more than one post** should apply in **separate forms.**

Applicants from the Univesity System / Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Application received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualification and experience for consideration will be called for an interview.

**REGISTRAR**
2007.08.06

(C/6175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு கட்டம் கட்டமாக தீர்வு காணப்படும்

## விசேட சந்திப்பில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.8

குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாகத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கடற்றொழிலாளர் அமைப்புக்களுடனான விசேட சந்திப்பிலேயே அவர் இதனைத் கூறியுள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அவதானங்களை எடுத்து, அதற்கான தீர்வுகளைக் காண்பதற்காக தான் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமுக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் யாழ். அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற விசேட மாநாட்டின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அம்மாநாட்டில் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், பாதுகாப்புத் தரப்பின் உயரதிகாரிகள், பனை அபிவிருத்திச்சபை யின் தலைவர் எஸ். சிவதாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின்போது கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் மற்றும் அவர்களது எதிர்காலம் தொடர்பான விடயங்கள் என்பன விரிவாக ஆராயப்பட்டதுடன் கடற்றொழிலாளர்களின் சம்மேளனத்தின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அமைச்சரிடம் கையளிக்கப் பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினர்கள் அனைவரோடும் கலந்துரையாடி கட்டம் கட்டமாகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

எமது இன்றைய பிரச்சினைகளுக்கு தமிழர்களாகிய நாமே காரணம் எனத் தெரிவித்த அமைச்சர், பிரச்சினைகளை நாங்கள் சரியாகக் கையாளவில்லை என்பதாலேயே பிரச்சினைகள் இன்று இந்நிலைக்கு வளர்ந்துள்ளதாகவும் இதற்கெல்லாம் காரணம் யுத்தமே என்றும் இதற்கொரு முடிவு காணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மக்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதே தனது பணியாகும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்குச் சாத்தியமான வழிவகைகளை அறிந்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன் கடற்றொழிலாளர்களின் ஒத்துழைப்பு ஒழுங்காகக் கிடைக்குமானால் இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்க்க முடியும் என்றும் தெரிவித்தார் - என்றுள்ளது. (அ-1)

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக.8

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமிழ் சுருக்கெழுத்து, தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு, கணனி ஆகிய பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 4 திறமைச் சித்திகளுடன் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து பாடசாலையைவிட்டு விலகியோர் இப்பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் வதிரியில் உள்ள கழக அலுவலகத்தில் வார நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கழகச் செயலாளர் க. வ. சிவச்சந்திரதேவன் தெரிவித்தார். (202)

# அனுமதிப்பத்திரம் இன்றி மரம் எடுத்துச் சென்றவர்களுக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக.8

அனுமதிப்பத்திரமின்றி சைக்கிளில் மரங்களை ஏற்றிச் சென்றவர்களுக்கு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரமின்றி மிதி வண்டியில் மரங்களை ஏற்றிச் சென்றதாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட ஏழு பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-207)

# மானியத்திட்டத்தின் கீழ் உரம் வழங்கப் பதிவு

யாழ்ப்பாணம், ஒக. 8

உடுவில் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட பிரிவில் 2007-2008 காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் சலுகை உரமானியத் திட்டத்தின் கீழ் உரத்தை பெறுவதற்கான விண்ணப்பங்கள் அந்தந்தப் பிரிவு விவசாயிகள் சம்மேளனங்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை விவசாயிகள் தமது பிரிவு விவசாயிகள் சம்மேளனத்திடமிருந்து பெற்று படிவத்தை நிரப்பி ஒப்படைக்கவேண்டும்.

சம்மேளனங்கள் இதனை சிபார்சு செய்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் உடுவில் கமநலசேவை நிலையத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பி-1 மற்றும் யூரியா உட்பட நான்கு வகையான நெற்செய்கைக்குஅத்தியாவசியமாக தேவைப்படும் உரங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் இதற்கு விண்ணப்பிக்காத விவசாயிகள் சலுகை மானிய விலையில் உரத்தைப் பெற முடியாதுபோகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (203-135)

# முருகமந்திரம் நூல் வெளியீட்டு விழா வெள்ளியன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், ஒக.8

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் எழுதிய முருகமந்திரம் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொண்டைமானறு சந்நியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஆயுரையை ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் வழங் குவார்.

தொடர்ந்து வரவேற்புரையை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் பிரார்த்தனை உரையை சைவப்புலவர் ஏ. அனுஷாந்தனும் தொடக்கவுரையை வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசனும் பாராட்டுரையை நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் வே. கனகசபாபதியும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை இருபாலை றோ.க.த. வித்தியாலய அதிபர் ச. லலீசன், குப்பிளான் கற்பக விநாயகர் ஆலய செயலாளர் நா. கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் வெளியீட்டுரையை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆ. தியாகராஜா நிகழ்த்துவார்.

இதில் முதற் பிரதியை இணுவில் கிசோ ஒப்பந்தகார உரிமையாளர் சி. சிவசுகிதனும் கௌரவப் பிரதிய்ை நீர்வேலி கந்தசுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள் சுவாமிநாதக் குருக்களும் பெற்றுக்கொள்வர். நயப்புரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்துவார்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு முன்னர் காலை 9.30 மணியளவில் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து முருக நாமபஜனையுடன் நூல் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். (203)




# சுழிபுரம் விக்ரோறியாவில் சரஸ்வதி சிலை திறப்பு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வெளிவாசலில் முன்பாக அமைக்கப்பட்ட புதிய சரஸ்வதி சிலையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தென் இந்திய சிற்பக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சிலையின் வர்ணப் பூச்சுகளை கல்லூரி மாணர்கள் தங்கள் கை வண்ணத்தில் மிக மிக அழகாகச் செய்துள்ளனர்.கல்லூரி அதிபர்திருமதி அ.வேலுப்பிள்ளையின் தலைமையில் இந்தத் திறப்புவிழா நடைபெற்றது. (203-28)

# வயல்களின் ஊடாக சட்டவிரோத மணல் ஏற்றும் வாகனங்கள் பயணம்

## நிலம் பாதிப்படைவதாக விவசாயிகள் கவலை

கட்டைவேலி, ஒக.8

கரவெட்டி, கப்பூதுப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றும் வாகனங்கள் வயல்கள் ஊடாகச் செல்வதால் வயல் நிலங்கள் சேதமடைந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கரவெட்டி, கப்பூதுப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் ஏற்றும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. மணல் ஏற்றுபவர்கள் தமது கனரக வாகனங்களை வயல்கள் ஊடாகக் கொண்டு செல்கின்றனர். இதனால் வயல் மண் இறுக்கமடைந்து வருகின்றது. கால போக நெற்செய்கையை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுக்கின்றனர். (202-275)

# சுன்னாகம் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி குற்றச் செயல்களைத் தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 8

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லூடாவை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :

பொது மக்கள் இன்று பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் ஒரு சிலர் மேற்கொள்ளும் சமூக விரோதச் செயல்கள் பொது மக்களை மிகவும் பாதிக்கின்றன.

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுதல், திருட்டுகள், கொள்ளைகள், கசிப்பு உற்பத்தி போன்ற செயல்களில் ஈடுபடுதல் உரிய ஆவணங்கள் இன்றி வாகனங்கள் ஓடுதல் போன்ற செயற்பாடுகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை மிகவும் பாதிக்கின்றன.

ஏற்கனவே, இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டும் உள்ளனர்.

இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தமது செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். தொடர்ந்தும் இச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்படுவது தவிர்க்க முடியாதாகிவிடும் - என்றார்.

இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய விவரம் தடக்குக் கிடைக்கும் சந்தர்ப்பதில் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுன்னாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மக்களுக்குத் தெரிவித்துள்ளார். (203)

# சட்ட விரோத மின்சாரம்; நால்வருக்கு 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஒக.8

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக கைது செய்யப்பட்ட 3 பெண்கள் உட்பட நால்வருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா அபராத்தை மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் விதித்தார்.

புன்னாலைக் கட்டுவன், ஈவினை பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரத்தை எடுத்ததாக கைதான நால்வரும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து தலா 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (1)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் பாடங்கள் கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான, செயலாமர்வு இன்று புதன்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

வலி. தென்மேற்கு ஒக. 8

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுக்கான நடமாடும் சேவை உதவிப் பதிவாளர் நாயகத்தின் தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையை இப்பிரசேத மக்கள் பயன்படுத்தி தங்கள் காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

யாழ். சேவாலங்கா நிறுவனம், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த நடமாடும் சேவை மேற்கொள்ளப்படுகின்றது. (203-135)



எழுத்தாளர் பொ. சண்முகநாதன் (சண் அங்கிள்) உதயனில் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகளின் தொகுப்பான 'சிரிப்போம் சிந்திப்போம்' நூலின் வெளியீட்டு விழா அண்மையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நூலாசிரியர், விழாவுக்குத் தலைமை வகித்த யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்), ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க. சிவாஜி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் க. சிவனேஸ்வரன், பத்திரிகையாளர் க. கணேசலிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் - பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி. சுந்தரேஸ்வரன் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் -

தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் ஆசியுரை வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 11 - 1961



உதிர்வு 30 - 07 - 1997

### செல்வி மைதிலி கந்தசாமி

திதி : ஏகாதசி

ஆண்டுகள் பத்து ஆனபோதும் அழியாத - உன்
நினைவுகள் நிழலாய் எமைத் தொடர
நிலைத்து நிற்கின்றாய் நிதமும் எம் மனத்தில்
நிஜமான காவியமாய்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரர்கள்.

(63200)


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

(63050)

**இறைச்சிக்கோழி**

புறொயிலர் இறைச்சிக்கோழி, சேவல் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்)

தொடர்பு: **NEW R.S.K FARM**
மான்ஸ் பாடசாலை வீதி,
உடுவில்.

(63140)

**விமான பொதிகள் சேவை**

உங்கள் பொதிகளை யாழ் –கொழும்பு அல்லது கொழும்பு – யாழ் தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.
கிளியரன்ஸ் இல்லாத பொருட்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்

கொழும்பு – யாழ் – 1Kg 250/=
யாழ் – கொழும்பு – 1Kg 200/=

EURO GROUP OF COMPANIES
35, STATION RD, MOUNT LAVINIA.
TEL: 077 3846998, 0114 542190

INTERNATIONAL COURIER SERVICE
11, VIHARA LANE, COLOMBO 06.
TEL: 011 4961196, 077 3561891


## நான்காண்டின் நினைவில் உம்மை மனம் வெதும்பி நிற்கின்றோம்

தாயவள் பார்வையில் 14 - 07 - 1993



ஈசனின் அணைப்பில் 08 - 08 - 2003

### செல்வி நிஷாளினி குணரத்தினம் (ஷாளிக்குட்டி)

08-08-2007

நான்காண்டு காலமாச்சு எம் கண்மணியே ஷாளி அம்மா
கண்ணின் மணிக்குள் காட்சிதந்த கலைமகளே ஷாளி
கண்ணாரக் கண்டுன்னை கட்டி அணைக்க - நாம்
நினைப்பாலே கண்ட கனவுகளோ ஒராயிரம் ஆயிரமாம்
ஏனம்மா எம் ஒலக்குரலை 48 மாதங்களாய் - நீ கேட்டுக்
கொண்டிருப்பது ஏன்? ஏன்?
உந்தனது ஆத்மா சாந்தி பெற
நாம் இறைவனை வேண்டி நிற்கின்றோம்

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (63400)

த.குணரத்தினம்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் நல்லையா நாதன்

(உப அதிபர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

தாயின் மடியில் 03-03-1954

ஆண்டவன் அடியில் 09-07-2007

வளரிகக் கல்வியின் களஞ்சியமே!
பாடசாலைச் சமூகம், நாதன் சேர் என
விம்மி அழ
பாசமுடையோர் நாதன் எனக் கதறி அழ
அப்பா என்றழைக்க உறவில்லாமல்
எமைப் பரிதவிக்க விட்டதேனோ?

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது சகல விதங்களிலும் உதவிகள் செய்தோருக்கும் வசாவிளான் ம.மகாவித்தியாலய கல்விச் சமூகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் எமதில்லத்தில் இன்று (08.08.2007) முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைவிழுந்தான் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (63065)

குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவுகளில்...

### அமரர் தருமராசா சிவானந்தம்

(இடைக்காடு - அச்சுவேலி)

மலர்வு 02•02•1977

உதிர்வு 08•08•2005

ஈராண்டு நிறைவு நாளில்
ஈரவிழிகளோடு - உன்
நினைவழியா இந்நாளில்
கண்ணீர்ப் பூக்களை
சமர்ப்பிக்கின்றோம்.

இடைக்காடு,
அச்சுவேலி. (63150)

நண்பர்கள்.




யாழ்ப்பாணத்தில்

அதிபர், ஆசிரியர் தொழில் வாண்மை வரலாற்றில்
புதிய தடம் பதிக்கும் ..............................

IPDT **ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்**

பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா - 2007

**Dip. in School Based Management**

மேற்படி பாட நெறியின் ஆரம்ப விழா எதிர்வரும் (11-08-2007) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்துத் தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது பாடசாலைகள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகொண்டு எம் மண்ணில் ஒரே ஒரு சொத்தான கல்விச் செல்வத்தைக் காப்பாற்ற எம்முடன் இணைந்து அர்ப்பணிக்க வாரீர்.

Institution of Professional Development for Teachers

கடந்த ஜூன் 30 ஆம் திகதி ஆரம்பமான

கற்பித்தல் சாதன ஆக்கத்திறன் டிப்ளோமா

Diploma Course in Creation of Teaching Aids

பாடநெறி பல்வேறு தொழில் வாண்மைக்களச் செயல் முறைகளினூடாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் முதலாம் அணியினர்.




படத்தில் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக உதவிப்பணிப்பாளர் த.சிவகுமார், பணிப்பாளர் பா.தனபாலன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K.யோகநாதன், கல்வி வளவாளர்கள் திருமதி ஞா.கணேசநாதன், திருமதி வி.நரேந்திரா மற்றும் பாடநெறியைப் பின்பற்றும் முதலாம் அணி ஆசிரியர்களின் ஒரு தொகுதியினர்.

மேலும் எமது நிறுவனத்தினால் நவீன 5E கற்பித்தல் முறைக்கேற்ற ஆரம்பக் கல்வித் துறைக்கான கற்பித்தல் சாதனங்கள் உருவாக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன. மேலும் இடைநிலை உயர்கல்வி மாணவர்களுக்கான CD கற்றல் சாதனங்களும் உண்டு.தேவையான பாடசாலை நலன் விரும்பிகள், அதிபர், ஆசிரியர்கள் கடித மூலம் "ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், இல.226, (ஆனந்தா அச்சகம்) கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.


உதவிப்பணிப்பாளர்
திரு.த.சிவகுமார்,
Na.Dip. in Teaching, B.A.,
Dip. in. Psy. 1st Class,
T.P.: 0776184250

பணிப்பாளர்
திரு.பா.தனபாலன்
B.A. (Cey.), PGDE (Merit), Dip. in Psy. 1st Class,
Dip. in Guidance and Counseling,
M.Phil. in Education
Cert. in Vocational Guidance(Singapore)

(63355)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 04 1959



உதிர்வு 20 07 2006

### அமரர் சின்னத்துரை மங்களேஸ்வரன் (பேபி)

(உரிமையாளர், பேபி கூல்பார்- குளப்பிட்டிச்சந்தி, கே.கே.எஸ்.வீதி)

ஆண்டொன்று ஒய்ந்தது
எம் ஓலங்கள் ஓயவில்லை
உம் உலகக் கயிறு ஓ அறுந்தது
எம் பாசக் கயிறு அறவேயில்லை
உம் ஒளி முகம் எம் கண் முன்னே
குறும்புப் பேச்சு எம் கண் முன்னே
எம்மோடு நீர் வாழ்ந்த காலம்
நீங்கா நினைவலையாய் தொடருமே.....

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தி எமது துயரதை பகிர்ந்து கொண்டவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (08.08.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில். (63404)

மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை**
வினாத்தாள் II
ஆக்கம்: **திரு.வே.அன்பழகன்,** யாழ்ப்பாணம்.
**ஒரு மணி 15 நிமிடங்கள்**

**01| இப்பகுதியை வாசித்து இல 1 முதல் 13 வரையுள்ள வினாக்களுக் குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**


மரக்கிளையின் மேலிருந்த மாம்பழக் குருவியானது மலரப்போகும் ஒரு மொட்டைப் போன்று காட்சி அளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்த குருவி ஆபத்து என எண்ணும் , எதனையும் காணவில்லை. எனினும் துரதிஷ்டமாக அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் தன்னை இரையாக்குவதற்கு, தனக்கு மிக-அருகில் குறிபார்த்திருக்கும் சாரைப்பாம்பைக் கண்டிருக்கும். பழைய தேய்ந்த சைக்கிள் ரயரைப் போன்ற கறுப்பு நிறமான சாரைப்பாம்பு சிறிய பூ மொட்டைப் போன்ற மாம்பழக குருவியை அவ்வேளையில் பிடித்துக்கொண்டது. குருவி கீச் கீச் எனப புலம்பியது.

01. இப்பந்தியில் குறிப்பிட்ட ஒரு பிராணி மாம்பழக்குருவி ஆகும். இங்கு குறிப்பிட்ட இன்னொரு பிராணியின் பெயரை எழுதுக.
......................................
02. சாரைப்பாம்பு எங்கே இருந்தது?......................................
03. சாரைப்பாம்பு என்ன செய்தது என்பதை உமது வசன நடையில் எழுதுக......................................
❁ கீழே தரப்பட்டுள்ள சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுக
04. ...................... 05. பக்கம் ......................
❁ கீழே தரப்பட்டுள்ள சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
06. பழைய...................... 07. கறுப்பு ......................
❁ கீழே தரப்பட்டுள்ள சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
08. ஆபத்து...................... 09. நிறம் ......................
❁ மேலே தரப்பட்ட பகுதியில் உள்ள அடைமொழிச் சொற்கள் இரண்டு எழுதுக.
10 ...................... 11 ......................
❁ மேலே தரப்பட்ட பகுதியில் உள்ள உவமை ஒன்று எழுதுக
12......................
13. மேலே தரப்பட்ட பகுதியில் உள்ள இணைமொழி ஒன்று எழுதுக
......................
(13 புள்ளிகள்)


**02| சரியான விடை எழுதுக.**
1. **நடந்தான்** என்பதன் எதிர்கால பன்மைச் சொல்
......................
2. பருகும் / சுத்தமாக / நீர் / நாம் / அவசியமாகிறது / இருத்தல் — ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.
......................
3. நாக்குப் புரளுதல் என்பதன் கருத்து
......................
4. பலதுறைகளிலும் உயர்கல்வி கற்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?
......................
5. தம்பி மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்து அம்மாவிடம் கொடுத தான். இவ்வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்கள் எண்ணிக்கையை சொற்களில் எழுதுக?
......................
6. **உண்டனர்** என்பது குறிக்கும் பால்
......................
7. பார்த்தல் — கண். நுகர்தல் - ......................
8. குறியீடுகளை இடுக. அதோ அண்ணா ஓர் ஆச்சிரமம் தெரிகிறது
(8 புள்ளிகள்)

**03| பின்வரும் வினாக்களுக்கான விடையினைத் தெரிந்து கீறிடுக.**
01. சீகிரிய, கிதுல்பவ்வ, எம்பக்க, தேவாலயம் என்பன எதற்குப் பிரசித்தி பெற்றனவாகும்?
1) வணக்கஸ்தலங்களாக 2) கலைத்துவப் படைப்புகளுக்காக
3) இராசதானிகளாக
02. பின்வரும் எந்த நாட்டவர் சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையை கடைசியாக ஆட்சி செய்தவர்களாவர்?
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர் 3) இந்தியர்
03. நீரை வெவ்வேறு இடங்களுக்குத் திசை திருப்பி எடுத்துச்செல்ல மனிதர்களால் வெட்டப்பட்டவைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
1) நதிகள் 2) குளங்கள் 3) வாய்க்கால்கள்
04. எந்த ஒரு தேசப்படத்திலும் ஆறு ஒன்றைக் காட்டுவதற்குப் பயன்பட்டுள்ள நியமமான வர்ணம் யாது?
1) பச்சை 2) நீலம் 3) மஞ்சள்
05. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
1) தாதுசேனன் 2) பராக்கிரமபாகு 3) மகாசேனன்
06. நுளம்புகள் முட்டையிடுவது எதில்?
1) தேங்கி நிற்கும் நீரில் 2) ஓடும் நீரில்
3) நிலத்திற்குக் கீழ் உள்ள நீரில்
(6 புள்ளிகள்)


**04| சரியான விடைகளை எழுதுக.**
01.  இப்பொருட்களைச் செய்யத் தேவையானது யாது?......................
02.  இதன் பெயர் யாது?
......................
03.  இவ்விளையாட்டின் பெயர் யாது?
......................
04. உணவு தயாரிப்பவர் அணிந்திருக்க வேண்டிய உடை
......................
(4 புள்ளிகள்)

**05| கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
01



A எனும் நகரத்தில் இருந்து D நகரத்திற்குக் குறைந்த தூரம் உள்ளது B ஊடாகவா? C ஊடாகவா?......................

02. 
இவ்வுருவப்படத்தில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?......................

03. நான் பாடசாலைக்குச் சமூகமளித்தது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 40 நிமிடங்களின் பின்பாகும். நான் பாடசாலைக்குச் சமூகமளித்தது மு. ப 8.25 மணிக்கு எனின், பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நேரம் யாது?......................

04. 

நாணயம் ஒன்றைச் சுண்டி விட்டபோது A பக்கம், B பக்கம் விழுந்த முறைகளை அருகிலுள்ள வரைபு காட்டுகிறது. அதன்படி, நாணயம் மேலே சுண்டி விடப்பட்டது மொத்த எத்தனை முறை யாகும்?......................

05. 
இவ்வுருவில் நிழற்றியுள்ள பகுதியைத் தசம தானத்தில் தருக.
......................
(10 புள்ளிகள்)


**06| பழக்கடையொன்றில் நாளொன்றில் விற்கப்பட்ட பழங்களின் விபரங்கள் அட்டவணையில் தரப் பட்டுள்ளன. அவ்விபரங்கள் அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

| பழம | எண்ணிக்கை. |
|---|---|
| மாம்பழம் | 28 |
| பப்பாசி | 35 |
| தோடம்பழம் | 19 |
| கொய்யாப்பழம் | 54 |
| விளாம்பழம் | 32 |

1) மிகக் கூடுதலாக விற்கப்பட்ட பழம் எது?......................
2) மிகக் குறைவாக விற்கப்பட்ட பழம் எது?......................
3) தோடம்பழத்தை விட எத்தனை கொய்யாப்பழங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன?......................
4) பப்பாசிப்பழங்களை விட எத்தனை கொய்யாப்பழங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? ......................
5) விற்பனை செய்யப்பட்ட மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை யாது?......................
6) பழக்கடையில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?......................
7) விற்பனை செய்யப்பட்ட கொய்யாப்பழங்களினதும் விளாம்பழங்களினதும மொத்த எண்ணிக்கை யாது? ......................
(14 புள்ளிகள்)


**07| பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச சொல்லை எழுதுக.**
1) நீர் ...................... 2) சிறுவன்......................
3) மரங்கள் ...................... 4) ஆசிரியர் ......................
5) தயவு செய்து கதவை மூடவும் ......................
(5 புள்ளிகள்)


**08| பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் தமிழ்ச் சொல்லை எழுதுக.**
1) Time ...................... 2) Hands ......................
3) Monkey...................... 4) Year ......................
5) Let us go to the school ......................
(5 புள்ளிகள்)

**09| பின்வரும் பறவைகளின் பெயர்களை எழுதுக.**




...................... ...................... ...................... ......................
(4 புள்ளிகள்)

**10| சரியான விடையின் கீழே கோடு இடுக.**
1) நாம் சந்தைகளில் வாங்கும் அடைத்த பொருட்களின் வெளியே Rs. என்ற ஆங்கிலச் சுருக்கம் காணப்படும். இது எதனுடன் சம்பந்தப்பட்டது
1. உற்பத்தி செய்த நிறுவனத்துடன் 2. பொருளின் தரத்துடன்
3. பொருள் விலையுடன் 4. உற்பத்தி திகதியுடன்
2) திஸ்ஸமகாராமெ, கிரிவிகாரை போன்ற வணக்கத் தலங்களையும், சிதுல் பவ்வ என்ற கலைத்துவப் பெறுமதி கொண்ட இடங்களையும் கொண்ட நகரம
1. அனுராதபுரம் 2. கம்பளை 3. பொலநறுவை 4. ருகுணை
3) எமது வாழ்வில் ஏற்படும் விபத்துக்கள் ஆபத்துக்களில் இருந்து எம்மைப பாதுகாக்கும் சில நடைமுறைகளில் பிழையானது எது?
1. மின்சாரத்தால் உலோகங்களை காய்ச்சியிணைக்கும் போது ஏற்படும் ஒளியை வெற்றுக்கண்ணால் பார்க்கக் கூடாது.
2. மாசடைந்த வளியில் வேலை செய்யும் போது; வாயையும் மூக்கையும் மூடிக்கொள்ளும் உபகரணத்தை பாவித்தல் நல்லது..
3. அணிந்துள்ள உடையில் தீப்பற்றினால் உடனே எழுந்து ஓட வேண்டும்
4. மின்னல் ஏற்படும் வேளைகளில் நிலத்துடனான தொடர்புகளைத் தவிர்த்தல் வேண்டும்.
4) தியலும, லக்சபான, துங்கிந்த, பம்பரகந்த என்பன இலங்கையின் பிரதான
1) நதிகளாகும் 2) மின்உற்பத்தி நிலையங்களாகும்
3) நீர்வீழ்ச்சிகளாகும் 4) குளங்களாகும
5) பூச்சிகளின் உடற்பகுதிகள் பிரதானமாக எத்தனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது?
1) 2 2) 3 3) 4 4) 6
(5 புள்ளிகள்)

**11| வீதியில் காணப்படும் ஒளிச்சமிக்ஞை விளக்கின் படம் அருகே தரப்பட்டுள்ளது. அதில் மின்குமிழ்கள் ஒளிரும் நிறங்களை ஒழுங்குமுறையில் எழுதுக.**

(1) ......................
(2) ......................
(3) ......................
(3 புள்ளிகள்)

**12| அரச இலட்சினையின் பகுதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.**


...................... ...................... ......................
(3 புள்ளிகள்)

**13| பின்வரும் உருக்களில் உள்ள பொருட்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருளை எழுதுக.**
1)  ...................... 2)  ......................
(2 புள்ளிகள்)

**14| பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.**
1) மெஹி என்ன ......................
2) எஹி யன்ன ......................
3) வதுர ......................
4) பஹய் ......................
(4 புள்ளிகள்)

**15| பின்வரும் வீதிக்குறியீடு, சைகை உணர்த்தும் கருத்தை எழுதுக.**
1)  ......................
2)  ......................
(2 புள்ளிகள்)

**16| கீழே ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. அந்த ஆறு சொற்களும் அழகிய மாலைப் பொழுதில் நாம் காணும் காட்சிகளுடன் சம்பந்தப்பட்டவை. அவை ஒவ்வொன்று பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக. சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.**
**1) வானம் 2) சூரியன் 3) சிறுவர்கள் 4) விவசாயிகள்**
**5) பூக்கள் 6) பறவைகள்**
01. ......................
02. ......................
03. ......................
04. ......................
05. ......................
06. ......................
(12 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**பார்த்திபன்- தர்சினி** தம்பதியரின்
செல்வப் புதல்வன் **செல்வன் ஜீவிகன்**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.08.2007) புதன்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் வசிக்கும் அப்பா, அம்மா, வவுனியாவில் வசிக்கும் அப்பம்மா, யாழ்.திருநெல்வேலியில் வசிக்கும் அப்பப்பா, சித்தப்பாமார், அன்ரிமார், தங்கை, தம்பி கொழும்பில் வசிக்கும் அத்தை, சித்தப்பாமார், மைத்துனன் இந்தியாவில் வசிக்கும் அத்தை, சித்தப்பா, மாமா, பிரான்ஸில் வசிக்கும் மாமா, திருநெல்வேலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அன்ரி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் புவனேஸ்வரி அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.




*சி.செல்வராசா (கிளி) அப்பப்பா.*
சிறிராமா,
335/28, இராச வீதி, கோப்பாய்.
(63070)

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




கரவெட்டியைச் சேர்ந்த
பாலராஜ்- அனுஷா
தம்பதியரின் புதல்வி
**பிரியங்கா**

இன்று 08.08.2007 அன்றைய தனது முதலாவது பிறந்த தினத்தை 11.08.2007 சனிக்கிழமை அன்று தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடவுள்ளார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார், அப்பம்மா, அப்பப்பாமார், சித்தப்பா, சித்திமார், பெரியப்பா, பெரியம்மா, மற்றும் அத்தைமார், மாமாமார், மச்சாள்மார் யாவரும் இறையருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றனர்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (63083) மு.பாலசிங்கம் (அப்பப்பா).

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
### FACULTY OF MEDICINE
**Academic Programme**

The Academic Programme of the New Batch(30th 2007) will commence on 20th August 2007.

Registrar
2007.07.06

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலா நரேந்திரா



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலா நரேந்திரா 07.08.2007 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற வீரவாகு நரேந்திராவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரவாகு- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் தபோதினி, ஜெகதீசன், சத்தியபாமா, தணிகாசலம், காலஞ்சென்ற மனோ-ரஞ்சனி மற்றும் புஸ்பராணி, சிவபாலன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சண்முகநாதன், வீரராகுலன், பாலாம்பிகை, சுரேந்திரன், கணேந்திரன், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் செல்வரத்தினம், கமலாதேவி, பிரியதர்ஷனி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2007) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் துண்டிமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*71 A/ 1, புங்கன்குளம் வீதி,*
*கொழும்புத்துறை.* (63417)

தகவல்:
க.புஸ்பராணி (சகோதரி).

## கண்ணீர் அஞ்சலி



### ச.சகாயசீலன்

கடந்த 05.08.2007 ஞாயிறு அன்று அமரரான எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய சக விரிவுரையாளர் ச.சகாயசீலன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் வாடும் ஏனையோரின் துயரிலும் நாம் பங்குபற்றுகிறோம்.

**ஆசிரியர்கள்,**
**அரசறிவியல் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(63419)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இளையதம்பி
அமிர்தலிங்கம்
(அமுதர் கல்லுடைக்கும் ஆலை ஸ்தாபகர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29.11.1952 | 11.08.2004 |

திதி:- ஏகாதசி (08.08.2007)

எமக்கோ அன்பான அப்பா
ஊரார்க்கோ அன்பான அமுது
என்றுமே ஆறாது எம்துயர்
இன்றும் உங்கள் நினைவுகளோடு....

உமையவள் உறை,
கோப்பாய் தெற்கு. (63416)

குடும்பத்தினர்.

# ஈராண்டு நினைவழியா நாள்

மனம் மகிழ
13 . 12 . 1988

மனம் நெகிழ
08 . 08 . 2005



## செல்வி கீர்த்தனா வாமதேவன்

நெருப்பினிலே பொன்னை உருக்கி எடுத்ததைச்
சிரிப்பென்று காட்டும் கண்கள் - அவள் கண்கள்
நிலவினைச் சாறிட்டு நெய்யோடு தேனிட்டுத்
துலங்கிடும் அழகிய கண்கள் - அவள் கண்கள்
இந்த,
தங்க மணிப்பிள்ளை ஒன்று மனம் மகிழ ஜனனம் - அது
தங்கடமை தீர்க்குமுனம் மனம் நெகிழ மரணம்
ஆடியிலே பரீட்சை எழுதி ஆனந்தப் படுவாய் என்றிருந்தோம்
ஆடியிலேயே கண்ணீர் விடுவோம் என்று அறியவில்லையே!
ஆடியிலே தீயிட்டு ஆண்டுகள் இரண்டு ஆயிடிச்சு
ஆனாலும் இன்னும் எம் கண்ணிலே நீரிருக்கு!

*நினைவால் வாடும்:*
ச.வாமதேவன் குடும்பத்தினர்.
(அதிபர், கோண்டாவில் இராம[illegible])
(63415)

## கோழிக் குஞ்சு விற்பனை

11.08.2007 சனிக்கிழமை புறொயிலர் குஞ்சு பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.*
(63390)

## மானிப்பாயில் சுகாதாரக் கண்காட்சி

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலைகளின் பங்களிப்புடன் சுகாதாரக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து இதற்கான முன் அனுமதியைப் பெற்று இந்த சுகாதாரக்கண்காட்சியை இப் பிரிவிலுள்ள பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் சிறப்பான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
(202-135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டொன்றானதண்ணா
அவனிவிட்டு நீயும் சென்று.....

அமரர் நடராசா
**ரவீந்திரகுமார் (ரவி)**



| கனவுகள் அரும்பிட | நினைவுகள் வெதும்பிட |
|---|---|
| 24.11.1976 | 20.07.2006 |

திதி: தசமி

*அண்ணா!*
*உன் விம்பம் தொலைவில்லை*
*எம் கண்ணுக்குள் இமைக்கும் போதும் உன்முகம்!*
*உன் பாசத்தில் மகிழ்ந்திருந்த வேளை - பொறுக்காது*
*காலனவன் செய்த வேலை! உன் கனிவான வாழ்நாள்*
*எண்ணிடத்தான் கருகுதடா எம்மிதயம்! நூறாண்டுகள் சென்றாலும்*
*எமை விட்டு நீங்காது உன் நினைவு.*

*17/22, நாவலடி ஒழுங்கை,*
*வண்ணார் பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (63182)

*என்றும் உன்நினைவுகளில்*
*பாசமிகு தங்கா*
*(துர்க்கா நமசிவாயம்).*

## 31ஆம் நாள் நினைவுகளுடன்...

### திருமதி முத்துராசா உதயசோதி



மண் மகிழ 13.11.1967
கண் நெகிழ 10.07.2007

கண்ணீரில் ஒரு மாதம் கரைந்து மறைந்ததம்மா!
எண்ணாத நாளில்லை நினைக்காத பொழுதில்லை
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்றழைக்க உறவு ஒன்றில்லையே!
கடை சிவரை எம்மோடு இருப்பீர்கள் என்றிருந்தோம்
இடை நடுவில் அப்பாவையும் இளம் பிஞ்சுகள் எங்களையும்
தவிக்க விட்டு ஏனம்மா மறைந்தீர்கள்
மாதம் ஒன்று சென்றாலும் எம் மூச்சில் கலந்து
உங்கள் அன்பார்ந்த நினைவுகள் ஆறாத் துயராக
நின்று நிழலாடுதம்மா....

கடந்த 10.07.2007 அன்று சிவபதமெய்திய எமது அன்புக் குலவிளக்கு திருமதி முத்துராசா உதயசோதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (08.08.2007) புதன்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (09.08.2007) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அன்றைய தினம் இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*தற்காலிக முகவரி:*
கோயிற் சந்தை, வாசிகசாலை வீதி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (63175)

**குடும்பத்தினர்.**
*நிரந்தர முகவரி:*
*மட்டுத்தடி, முகமாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குற்றச்சாட்டுக்கு இலக்கானவரே விசாரணையையும் நடத்தும் நியாயம்

இலங்கையில், இலங்கைஅரசுத் தரப்பின் ஆசீர்வாதத்தோடு அரசுப் படைகளும், அதற்கு ஒட்டுறவாகச் செயற்படும் துணைப்படையான கருணா குழுவும் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மேற்கொள்ளக்கூடிய மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களைக் கண்காணித்து, விசாரித்து, அறிக்கையிடக் கூடிய ஆணையோடு ஐ.நாவின் கண்காணிப்புக்குழு ஒன்றை இங்கு நிறுவவேண்டும். அத்தகைய செயற்பாட்டை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட - இவ்விடயத்தில் சிரத்தையுள்ள - அரசுகளும் மற்றும் இலங்கை அரசுத் தரப்பும் ஒத்துழைக்க வேண்டும்.

- நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் (Human Rights Watch) என்ற அமைப்பு இலங்கை நிலைவரம் தொடர்பான தனது பிந்திய அறிக்கையில் இவ்வாறு கோரியிருக்கின்றது.

இலங்கை அரசுத் தரப்பையும் கருணா குழுவையும் மோசமான மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றன என்று தெரிவித்து கடுமையாகச் சாடியிருக்கின்றது இந்த அறிக்கை.

மனித உரிமைகள் அவதானிப்பு மையத்தின் அறிக்கை வெளியான கையோடே, அந்த அறிக்கையில் இடம்பெற்ற பிரதான கோரிக்கையை அடியோடு நிராகரித்து விட்டது இலங்கை அரசுத் தரப்பு.

அரசின் சார்பில் அதன் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இவ்விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

''மனித உரிமை மீறல் கண்காணிப்புக்காக ஐ. நா. குழு ஒன்றை அழைப்பதற்கு இங்கு இடமில்லை. அப்படி அழைப்பது இலங்கையின் இறைமையை மீறும் செயற்பாடாக இருக்கும். அத்தோடு இத்தகைய விவகாரங்கள் தொடர்பாக இலங்கை தனது அதிகாரிகள் மூலம் விசாரணைகளை மேற்கொள்வதற்கான தகைமை, அவ்வாறு ஐ.நா.கண்காணிப்புக் குழு நியமிக்கப்படுவதன் மூலம் சந்தேகத்துக்கும் கேள்விக்கும் உள்ளாகும்'' - என்றும் அமைச்சர் கெஹலிய விளக்கமளித்திருக்கின்றார்.

''மனித உரிமைகளைச் சரிவரப் பேணுவதற்கு எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எங்களது செயற்பாடுகள் குறித்து எமக்குச் சந்தேகம் - ஐயம் - ஏதுமில்லை. ஆகவே வெளியாரின் கண்காணிப்பு இது விடயத்தில் அவசியமல்ல. அத்தகைய கண்காணிப்பை ஏற்படுத்துவது இலங்கையின் இறைமையை அடியோடு மீறும் செயலாகும்.'' - என்றும் அவர் விளக்கமளித்திருக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்விவகாரத்தில் இத்தகைய - முற்கூட்டியே தயாராக இருக்கும் ('ரெடி மேட்') - பதிலே இலங்கை அரசுத் தரப்பிடமிருந்து வெளிவரும் என்பதையும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் தனது அறிக்கையில் ஏற்கனவே கோடி காட்டியிருப்பதுதான்.

''மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களுக்கு முடிவு கட்டப்படும், அவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அரசு மீண்டும் மீண்டும் வாக்குறுதிகளை வழங்கிவந்துள்ளது. எனினும் காத்திரமான நடவடிக்கை எடுக்கும் விதத்தில் அது, போதிய அரசியல் பற்றுறுதியை வெளிப்படுத்தவேயில்லை.'' - என்று மனித உரிமைகள் அவதானிப்பு மையத்தின் ஆசியப் பணிப்பாளர் பிரேட் ஆடம்ஸ் முற்கூட்டியே குறிப்பிட்டதற்கு, இப்போதும் மீண்டும் உறுதி வழங்கப்படுகின்றது.

இத்தகைய மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தவும், அவற்றைப் புரிந்தவர்களை அதற்குப் பொறுப்பாக்கித் தண்டிக்கவும் செய்யும் மனவுறுதியும் திடசங்கற்பமும் அரசுத் தரப்பிடம் இல்லை என்பதே பிரதான குற்றச்சாட்டு.

மனித உரிமைகள் அவதானிப்பு மையம் தனது பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டியபடி மஹிந்தரின் அரசு பதவியேற்ற பின்னர், தமிழருக்கு எதிரான மோசமான மனித உரிமை மீறல்கள் - படுகொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல், கப்பம் அறவிடல் போன்ற மோசமான சம்பவங்கள் - பல்கிப் பெருகியுள்ளன. ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் அரசுப் படையினரோ அல்லது கருணா குழு போன்ற துணைப்படையினரோ இத்தகைய நடவடிக்கைகளுக்காகப் பொறுப்பாக்கப்பட்டு, சட்ட ரீதியாகத் தண்டிக்கப்படுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்ற சரித்திரமே இங்கு கிடையாது. மனித உரிமைகள் அவதானிப்பு மையம் கூறுவதுபோல, ''பாதுகாப்புப் படைகள் கீழ்த்தரமான யுத்த உத்திகளைக் கையாள்வதற்கு வெளிப்படையாகவே இலங்கை அரசு பச்சைக் கொடி காட்டியுள்ளது. தீவிரமடைந்துவரும் துஷ்பிரயோகங்கள், அவற்றின் அளவு கடந்த பெருக்கம் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகளை கையாளத் தம்மால் இயலாது அல்லது அத்தகைய விருப்பம் தமக்கு இல்லை என்ற நிலைப்பாட்டை அரசு அமைப்புகள் ஐயத்துக்கு அப்பால் வெளிப்படுத்தி வருகின்றன. அரசு வேண்டுமென்றே பாசாங்குத்தனத்துடன் பாராமுகமாக இருக்க, இந்த மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்கள் தொடர்கின்றன'' - என்பதே உண்மை நிலையாகும்.

இப்போது இலங்கையில் மோசமாக இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களுக்கான குற்றச்சாட்டு வெறுமனே இலங்கையின் அரசுப் படைகள் மீதும் அந்தப் படைகளுடன் ஒட்டுறவாகச் செயற்படும் கருணா குழு மீதும் மட்டும் சுமத்தப்படவில்லை. இத்தகைய மீறல்கள் குறித்து பாராமுகமாக இருந்து, அவற்றைத் தூண்டி, வழிநடத்தி, அவற்றுக்குப் பச்சைக்கொடி காட்டி அனுமதிப்பதே அரசுதான் என்ற சர்வதேச மட்டத்திலான குற்றச்சாட்டும் இப்போது பகிரங்கமாக வெளிவந்திருக்கிறது.

இவ்வாறு தனக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள பிரதான குற்றச்சாட்டுக் குறித்து ஆராய தனது (அரசினது) விசாரணைக் கட்டமைப்பே போதுமானது என்று அரசுத் தரப்பில் கூறப்படுவது, குற்றம் சுமத்தப்பட்டவரே தனக்கு எதிரான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை செய்யும் கேலிக்கூத்தை நியாயப்படுத்துவதற்கு ஒப்பாகும்.

# கிழக்குக்குள் எக்குழுவும் ஊடுருவ அனுமதிக்கப்படவேமாட்டாது!

## ஐ. நா. உயரதிகாரியிடம் கோத்தபாய விளக்கம்

கொழும்பு,ஓக. 8

அரசுப் படைகள் புதிதாக விடுவித்துள்ள கிழக்குப் பிரதேசத்துக்குள் வேறு எந்தக் குழுவும் புதிதாக ஊடுருவ அனுமதிக்கப்படமாட்டாது.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் - ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரணப் பணி இணைப்பாளர் பொறுப்புகளை வகிக்கின்றன - ஐ. நாவின் கீழ் நிலைச் செயலாளரான - ஜோன் ஹோம்ஸை நேற்று முன்தினம் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

இலங்கை அரசுக்கும் ஐ.நா. அமைப்புகளுக்கும் இடையிலான உறவை விருத்திசெய்து பேணுவது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தற்போதைய பாதுகாப்பு நிலைவரம், புதிதாக மீட்கப்பட்ட கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன குறித்து ஐ.நா.உயரதிகாரிக்கு பாதுகாப்புச் செயலாளர் எடுத்து விளக்கினார்.

புதிதாக மீட்கப்பட்ட கிழக்குப் பிரதேசத்திற்குள் எந்த ஆயுதக் குழுவும் ஊடுருவ இடமளிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் அங்கு ஐ.நா.முகவர் அமைப்புகளுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

பாதுகாப்புப் படைகள், தொண்டு நிறுவன அமைப்புகள், உள்ளூர் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகிய தரப்புகள் இடையே நல்லுறவைக் கட்டியெழுப்பவும், வடக்கு, கிழக்கில் மனித நேயப் பணிகள் தங்கு தடையின்றி சீராக இடம்பெறுவதை ஊக்குவிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இச்சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் உறுதியளித்தார்.

மீள்குடியமர்வு நடவடிக்கை, அப்பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை மீள ஏற்படுத்தல் மற்றும் சட்டம், ஒழுங்கைப் பேணும் பொறுப்பை பொலிஸாரிடம் ஒப்படைத்தல் போன்ற பணிகள் துரிதப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மீட்கப்பட்ட பிரதேசங்களில்பொலிஸ் கட்டமைப்பில் எல்லா இனங்களையும் சேர்ந்தோர் உள்வாங்கப்படுவர். இதன் மூலம் சமரச நிலைக்கான சுமுக சந்தர்ப்பம் - வாய்ப்பு - ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன. (சி-ப)

# அமெரிக்க அமைதித் தூதுவர் ஒருவர் இப்போது இலங்கையில் அவசியமில்லை

## ராஜாங்க அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

நியூயோர்க்,ஓக. 8

தற்போதைய சூழ்நிலையில் அமெரிக்க அமைதித் தூதர் ஒருவர் இலங்கையில் நிலைகொண்டிருக்கவேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதப்படவில்லையென்று அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுக் குழுவின் உப குழுக் கூட்டத்தில் உரையாற்றிய மத்திய ஆசியா மற்றும் மத்திய கிழக்கு தொடர்பான ராஜாங்க அமைச்சின் பிரதான பிரதி உதவிச் செயலாளர் ஸ்ரீவன் மான் ''இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான செயற்பாடுகள் முன்நகர்வதைக் கவனித்துக் கொள்வதே இப்போதைய எமது அக்கறை; தீர்வுக்கான குறிப்பிட்ட யோசனைகளை முன்வைப்பதல்ல'' என்று கூறினார்.

இந்நிலையில் விசேட அமெரிக்க அமைதித் தூதுவர் ஒருவர் இலங்கையில் தரித்திருக்க வேண்டுமென்று நாம் கருதவில்லை என்றார் அவர்.

ஸ்ரீவன் மான் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நிரந்தரமான அமைதிக்கும் இலங்கையர் அனைவருக்கும் மனித உரிமைகளுக்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கும் உதவுவதற்கு அமெரிக்கா திடசங்கற்பம் கொண்டுள்ளது. மிக அமைதியான, சுபீட்சமான எதிர்காலமொன்றை உருவாக்குவதற்கான பாதுகாப்பு பத்திரத் தன்மையை இலங்கை மக்களுக்கு உருவாக்கிக் கொடுப்பது இறுதியில் இலங்கை அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

### 3 நாள்களில் 8 பேர் கொலை

அந்த நாட்டில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஆள்கள் காணாமற்போதல், கடத்தப்படுதல், சித்திரவதைகள் சட்டத்திற்கு விரோதமான கொலைகள் தொடர்பான அறிக்கைகள் குறித்து நாம் அதிக கவலை கொண்டுள்ளோம். கடந்த 3 மாதத்தில் 3 நாள்களில் 8 பேர் சட்டத்திற்கு விரோதமான முறையில் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர். இவை தொடர்ந்து இடம்பெற்றுள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மனித உரிமை நிலைமை மிக மோசமாக இருக்கின்றன. இலங்கையரின் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அங்கு சட்ட ஒழுங்கு கிடையாது - என்றும் அவர் கூறினார். (ப)

# காலங்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகளுக்கான நடமாடும் சேவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக. 8

காலங்கடந்த இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நாளை குடாநாட்டில் ஆரம்பமாகின்றது.

முதலாவது நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் பதிவாளர் நாயகம் அலுவலகம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றினால் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பிரதேச செயலக ரீதியாக காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை அந்தந்த பிரதேச செயலகங்களில் நடமாடும் சேவை இடம்பெறும்.

நடமாடும் சேவை இடம்பெறும் திகதிகள் பிரதேச ரீதியாக வருமாறு:-

09.08.2007 - சண்டிலிப்பாய்,
10.08.2007 - கரவெட்டி, பருத்தித்துறை,
13.08.2007 - தென்மராட்சி,
17.08.2007 - சங்கானை,
15.08.2007 - வேலணை, ஊர்காவற்றுறை,
16.08.2007 - நல்லூர்,
17.08.2007 - தெல்லிப்பழை,
21.08.2007 - கோப்பாய்,
31.08.2007 - யாழ்ப்பாணம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களும் இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களுக்குச் சென்று யாழ். மாவட்டத்தில் மீளக் குடியேறியவர்களும் இச் சேவை மூலம் தமது பதிவுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

மேலதிக விவரங்களை கிராம அலுவலருடனோ அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்றிட்டப் பிரிவினருடனோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1-202)

### பி.ப. 4 மணிக்குப் பின்னர் வல்லையில் பயணிக்க வேண்டாம் எனப் படையினர் அறிவுறுத்து

பொதுமக்களின் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு பி.ப. 4 மணிக்குப் பின்னர் வல்வெட்டித்துறையின் பிரதான வீதியில் பயணம் செய்ய வேண்டாமென இராணுவத்தினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் பயணம் செய்யவேண்டிய தேவையுடையவர்கள் உள் வீதிகளைப் பயன்படுத்தி பயணத்தை மேற்கொள்ளுமாறும் இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ-1-155)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 24 | வியாழக்கிழமை 09.08.2007 |
| திதி : ஏகாதசி | மு.பகல் : 09.13 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் பி.பகல் : 02.05 |
| சுபநேரம் | : 07.34 - 09.04 |
| ராகுகாலம் | : 01.34 - 03.04 |

# சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்







சங்கானையூர் சண்முகரத்தினம்

**கன்னி.**:-(உத்தரம் 2,3,4ஆம் கால் அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

மேற்படி கன்னி ராசியில் பிறந்த உங்களது ராசிக்கு 12ஆம் வீடான சிங்க ராசியில் கேதுவுடன் சனி பகவான் 05.08.2007 இல் இருந்து சேர்க்கையாக இருப்பதாலும் அதை செவ்வாயும் பார்ப்பதாலும் உங்களுக்கு தலைக்கு வேதனை தரும் சம்பவங்களும் பிரயாணத் தடையும் சத்துரு பயமும் ஏற்பட இடமுண்டு. ராசிக்கு 5 அதிபதி, 6அதிபதி சனிபகவான் 12 இல் ஞானகாரகன் கேதுவுடன் இருப்பது வழக்கு வம்புகள், கண்போன்ற அவயவங்களில் சத்திரசிகிச்சை என்பன தர இடமுண்டு. மேலும் இன சனபந்துகளுடன் பகை. கீழ் சகோதரங்களால் ஏற்படக் கூடிய துன்பங்கள் என்பன எதிர்பார்க்கப்படவேண்டியவை.

திருமணமாகாத திருமண வயதுடையவர்களுக்கு இந்த சனி மாற்றம் ஏழரை முற்கூறாக அமைவதால் திருமண வாய்ப்புகளும் உண்டு. ஆனாலும் மிக எளிதாக திருமணம் போன்ற [illegible] வாய்ப்பில்லை.

மாணவர்களுக்கு:- கல்வி நிலை மேம்படும். கல்விக்குரிய கிரகம் குருவாக அமைவதால் 15.11.2007 வரை எதிர்நீச்சலான பலனே தரும். வெளிநாட்டுப் பிரயாணம் தடைப்படலாம். 10.04.2007 இன் மேல் கல்வி நிலையால் சிறப்புண்டு. 2008 ஆம் ஆண்டின் மேல் கல்வியைத் தொடரும் மாணவர்கள் உயர் நிலை கல்வியைத் தொடர்வர்.

தலையிடி, [illegible], கபாலம், கண் வருத்தம் இப்படி ஏதாவதொன்று கல்விக்குத் தடையாக இருக்கும். ஆனாலும் இவை சம்பந்தமாக சிகிச்சை பெறவே பலனுண்டு. பயப்படவேண்டியதில்லை.

தொழிலாளர், உத்தியோகத்தர்களுக்கு :- தொழில் நிலை நன்மை தரும். தொழிலால் சிறப்புண்டு. கணிதத் துறையுடன் கூடிய தொழில் செய்வோருக்கு அத்துறையில் பதவி உயர்வுகள் பெறுவீர்கள். உங்கள் ஜாதகத்தில் மகர ராசியில் சனி இருக்க பிறந்த உங்களுக்கு 05.08.2007 தொடக்கம் அடுத்து 2 1/2 வருட காலத்திற்கு தொழில் நிலை மாறும். இடமாற்றங்களும் புதிய தொழில் நிலை உருவாக்கவும் பலனுண்டு. மேலும் வதிவிடத்தை விட்டுப் பிறிதோர் இடத்துக்கு சீவியமும் தர வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வந்த ஐ.நா. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் ஏற்கனவே விடுத்த இரண்டு உத்தரவுகளை நடைமுறைப்படுத்தினால் மேற்சொன்ன அட்டூழியங்களை கட்டுப்படுத்தமுடியும் என்றும்-

அதன்பொருட்டு அவருக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி உதவுமாறும்-

ஜோன் ஹோம்சிடம், யாழ்மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்த ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகாலப் பணி இணைப்பாளர் பொறுப்புகளை வகிக்கும் கீழ்நிலைச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.விக்னராஜாவை அவரது அலுவலக அறையில் சந்தித்துப் பேசினார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ். நீதி மன்றத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

குடாநாட்டில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாகப் கலந்துரையாடப்பட்டது .

இதன்போது குடாநாட்டில் இடம்பெறும் கொலைகள், ஆள் கடத்தல்கள், காணா மற்போதல் தொடர்பாகச் சில விடயங்களை ஐ.நா அதிகாரிக்கு யாழ்.நீதிவான் சுட்டிக்காட்டினார்.

நீதிவான் அவருக்குத் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இரண்டு உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் நடமாடுபவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட படைகளின் தளபதிக்கும் -

உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைவோரைப் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு யாழ். நீதிமன்றத்திற்கு அருகில் அல்லது யாழ். சிறைச்சாலைக்கு அருகில் பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்து, புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கம்லத்துக்கும் -

பிரதம நீதியரசர் உத்தரவிட்டிருந்தார். எனினும் அந்த உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை .

கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், காணாமற்போதல் என்பன தொடர்ந்த வண்ணமே உள்ளன.

பிரதம நீதியரசரின் உத்தரவுக்கு அமைய சிறைச்சாலைக்கு அண்மையில் பாதுகாப்பான முறையில் புனர்வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளோர் அங்கு சரணடைவார்கள். இதன் மூலம் கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போதல் ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

இந்த உத்தரவுகளை நடைமுறைப் படுத்துவதற்கு தங்களுக்குள்ள செல்வாக்கைப் பிரயோகித்து உரிய தரப்புகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜோன் ஹோம்ஸிடம் நீதிவான் வேண்டுகோள் விடுத்தார்.

குடாநாட்டு மக்கள் பொருள் விலையேற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு ஆகியவை காரணமாக எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாகவும் அவர் எடுத்துக் கூறினார்

### அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

இதன் பின்னர் ஐ.நா. அதிகாரி ஜோன்ஸ் ஹோம்ஸ் யாழ்.பொது நூலகத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். பல்கலைக் கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே.குமாரவடிவேல், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் மற்றும் பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் மற்றும் அரச திணைக்களங்களுக்கான தேவைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிப் பணிகள் ஆகியன தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இந்தச் சந்திப்பு இடம் பெற்றமையால், யாழ். நகரப் பகுதியில் முக்கிய வீதிகள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தன.

ஐ.நா. அதிகாரி நேற்று நண்பகல் சுமார் ஒரு மணியளவில் பலாலி திரும்பி அங்கிருந்து கொழும்பு சென்றார். (அ-50)

## எம்.பிக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சதித் திட்டத்தின் சூத்திரதாரியாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான சார்ள்ஸ் ஞானக்கோன் என்ற தமிழரே செயற்படுகின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

சார்ள்ஸ் ஞானக்கோன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர். அந்த இயக்கத்துடன் நெருக்கமான தொடர்புடையவர். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையுடன் தொடர்புடையவர் எனக் கைது செய்யப்பட்டவர். - என்றும் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறான சதிமுயற்சிகளின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்படுகின்றன என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

அப்போது அவர் கூறியவையாவது:-

பயங்கரவாதத்திற்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தோல்வியுறச் செய்யவும், அரசைக் கவிழ்க்கவும் சதித் திட்டம் ஒன்று இரகசியமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளிலும் சூட்சுமமாக நுழைந்து அரசுக்கு எதிராகத் திசை திருப்புவதே இந்த சதித்திட்டத்தின் நோக்கம்.

எங்கள் அணியைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதினொரு கோடி அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக வழங்கவும் பேரம் பேசப்பட்டுள்ளது.

இக்கட்டான நிலையில் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும்போது அரசுக்கு எதிராக வாக்களிக்கச் செய்து ஆட்சியைக் கவிழ்ப்பதே இந்த சதித்திட்டத்தின் நோக்கம். - என்றார். (சி)

## தரம் 1...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனைகளும் இந்த இலவசக் கல்வி முறைக்குக் குந்தகம் ஏற்படுத்திவிடும்.

இந்த சிபார்சுகளின் அடிப்படையில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது பிள்ளையின் பெற்றோர்களுக்கும், சகோதரர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

அதாவது ஜி. சீ. ஈ. சாதாரணதரம், உயர்தரம், பட்டதாரிகள், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் என்றும் -

சாதாரண ஊழியர், எழுதுவினைஞர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், செயலாளர்கள், பணிப்பாளர்கள் என்றும் -

பெற்றோரின் நிலைமைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி நாட்டில் 60 வீதமானவர்கள் ஜி. சீ. ஈ. சாதாரணதரம் சித்தியடையாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

பெற்றோரின் கல்விக்கும் அவர்களின் தொழிலுக்கும் தரம்பிரித்து புள்ளிகள் வழங்கப்படும்போது விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், சிற்றூழியர்கள், ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் மற்றும் வெளிநாடுகளில் பணிப்பெண்களாகத் தொழில்புரிபவர்கள் போன்றோரின் பிள்ளைகள் உயர்ந்த பாடசாலைகளில் கல்வி பெறமுடியாத நிலை ஏற்படும்.

இது இலவச கல்வி முறையின் அடிப்படை நோக்கத்தையே சிதைத்துவிடும் ஒரு செயலாகும்.

பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் எல்லாப் பிள்ளைகளும் அடிப்படை 'மொன்டிசூரி' (பாலர் வகுப்பு) கல்வியைப் பெற்றவர்கள் அல்லர்.

இப்பிள்ளைகளுக்கு போட்டிப் பரீட்சையும், அறிவுத்திறன் பரீட்சையும் நடத்தி அதனடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கான அனுமதியைத் தெரிவுசெய்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும்.

ஆரம்ப வகுப்பில் திறமையைக் காட்டாத பலர் பிற்பகுதியில் அதி சிறந்த மாணவர்களாகவும் பட்டதாரிகளாகவும் பிரகாசித்துள்ளனர். இதனை எவரும் மறுக்க முடியாது.

இவை மட்டுமல்ல. ஆரம்ப வகுப்பில் தமது பிள்ளைகளைச் சேர்க்க வரும்போது பெற்றோர் தம்முடன் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தரச் சான்றிதழ், பட்டதாரி மற்றும் டிப்ளோமா சான்றிதழ், தொழில் சான்றிதழ், கிராமசேவையாளர் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் என்பனவற்றை எல்லாம் கொண்டு செல்ல வேண்டும்.

இவற்றை எல்லாம் தேடிப் பெறுவதற்குள் பிள்ளைகள் பாடசாலைக்குச் சேரும் வயதைக் கடந்துவிடுவார்கள்.

அடுத்த ஆண்டில் முதலாம் தரத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது அரசு அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களையும், சிபார்சுகளையும் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். இலவசக் கல்வி முறை பாதுகாக்கப்பட வேண்டும். - என ரணில் விக்கிரமசிங்க சபையில் கோரிக்கை விடுத்தார்.

## விளம்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து படையினர் நேற்று அப்பகுதியில் தேடுதலைமேற்கொண்டனர்.

அப்போது வர்த்தகநிலையங்களின் உரிமையாளர்களை அழைத்தபடையினர் உடனடியாக விளம்பரப்பலகைகளை அகற்றுமாறு பணித்தனர். (அ-1-15-78)

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டு முடக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்களை சந்திப்புக்களில் விவரமாக எடுத்துக் கூறினோம் - என்று அவர் சொன்னார்.

தமிழ் மக்கள் விரும்பும் சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வை எட்ட சர்வதேசம் உதவ வேண்டும் என்றும் - தாம் சென்ற சகல நாடுகளிடம் கோரிக்கை விடுத்ததாகவும் அவர் மலும் தெரிவித்தார். (அ-1)

## ஈழத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரிட்டனில் தஞ்சம்கோரியிருந்தார். அவரது அகதி அந்தஸ்துக் கோரிக்கை 2005ஆம் ஆண்டு உள்துறை அமைச்சினால் நிராகரிக்கப்பட்டது. அவரது மேன்முறையீடும் அதே ஆண்டில் நிராகரிக்கப்பட்டது.

மீண்டும் அவர்செய்த மேன்முறையீட்டை விசாரித்த, பிரிட்டிஷ் அகதிகள் விவகார மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

1999ஆம்ஆண்டு சம்பந்தப்பட்டவர் இலங்கைப் படையினரால் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டு ஐந்து தினங்கள் வைத்து சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட இவர், மீண்டும் தாம் கைது செய்யப்படலாம் என அஞ்சி பிரிட்டனுக்கு வந்து அகதிஅந்தஸ்துக் கோரியிருந்தார். (அ-1)


## மரண அறிவித்தல்கள்

### குமாரகுலசிங்கம் (இராசகிளி) குசேந்திரன் (குசன்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும்கொண்ட குமாரகுலசிங்கம் (இராசகிளி) குசேந்திரன் (குசன்) நேற்று (07.08.2007) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் குசேந்தினி (ஆனந்தி), கஜேந்திரன் (ஈசன்), கஜேந்தினி (ஜெயந்தி)ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராசா, அனுஷா ஆகியோரின் மைத்துனரும் வினுராஜ், வினுசியா, குருஷன், வினோஜன், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்பு மாமனும் பிதுர்ஷன், லதுஷன் ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.08.2007) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: கஜேந்திரன் (ஈசன் - சகோதரன்).

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



கைதடிவடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை 07.08.2007 செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்... காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகம்மா, இராசலட்சுமி, அன்னம்மா காலஞ்சென்ற இராஜசுந்தரம் மற்றும் பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிற்றம்பலம் (பாரேன்), மகேஸ்வரி (திலகம்), பொன்னம்பலம், பேரம்பலம் (காணி மாவட்ட பதிவாளர் அலுவலகம் - கச்சேரி, யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரிமாலா (பாரேன்), சண்முகலிங்கம், ஜெயராணி, ஜெயகௌரி, சூரியகுமார் (பிரான்ஸ்) காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் பூபாலசிங்கம் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகுமாமனும் கௌசி, குருபரன், ஹரிகரன், தினேஸ்வரன் (தினா), சிவகுமார், நிரஞ்சினி, ரகுவதனன், ரூபவதனன், ஜெயவதனி, ஹேமவாணன், பவினா, சஞ்சீவன், இராஜசெல்வி, அச்சுகன், துர்க்கா, சுமி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.08.2007) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு.

தகவல்: பொன்னம்பலம், பேரம்பலம் (மகன்).



யுனிலங்கா ஆதரவில்

தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாபெரும் செயலமர்வு!

வெற்றித்தேர்வு: திருமலை. எஸ்.க[illegible]லிங்கம் வருகின்றார்!!

முதல் நாள் காலம்: நாளை (09.08.2007) காலை 9 - 2.30 மணிவரை.
இடம்: கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

இரண்டாம்நாள் காலம்: (10.08.2007) வெள்ளி காலை 9 - 2.30 மணிவரை.
இடம்: கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.


பதிவுகளை மேற்கொள்ளும் இடங்கள்:
1. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
2. யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை
3. சுன்னாகம் துர்க்கா புத்தகசாலை
4. நெல்லியடி மொடேன் புத்தகசாலை
5. [illegible] மற்ஸ் அக்கடமி
6. [illegible] சயன்ஸ் அக்கடமி

மேலதிக விவரங்களுக்கு: தொ.பே. 0773126807/021 222 9916/ 021 226 3815

பேருந்து ஒழுங்கு தேவைப்படுபவர்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளருடன் 021 222 2877 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு செயலமர்வில் கலந்துகொள்ள முடியும். (63431)



## கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் வடிவநாதன் கஜப்பிரவீன்

பிறப்பு 19.08.1986

இறப்பு 31.07.2007

31.07.2007 அன்று அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்கள், நேரிலும் தொலைபேசியிலும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்து உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

7/1, அன்னசத்திர லேன், நந்தாமடம், யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா, மனைவி, பிள்ளை மற்றும் சகோதரர், உற்றார், உறவினர். (63432)



ICT - ICT - ICT
Grade 10
English Medium
Tamil Medium
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு
R.Kumaran - B.Sc.
0776577359



MY COMPUTER தமிழ் கணனி மாத இதழ்
சகல [illegible] இடங்களிலும், வெளியீடு: SPEED IT net. 4591871


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org